# இஸ்லாமிய நோக்கில் குடும்பவியல் கடமைகள் : அல்குர்ஆன் மற்றும் ஹதீஸ் பிரதிகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

முருகையா சதீஸ்

தமிழ்த்துறை
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்
இலங்கை.
satheesmurukaiya@gmail.com

**ஆய்வுச் சுருக்கம் :** *இஸ்லாம் மார்க்கமானது உலக மக்கள் அனைவரையும் நெறிப்படுத்த வந்த பூரணத்துவம் மிக்க ஒரு மார்க்கமாகும். அம்மார்க்கம் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு குர்ஆனையும், முஹம்மது நபி (ஸல்) அவர்களின் தொகுப்பான ஹதீஸ் மூலாதாரத்தினையும் அடிப்படையாகக் கொண்டு வாழ்கிறது. அத்தகைய சமூகத்தில் குடும்ப அலகு என்பது முக்கியமானதாகும். அக்குடும்ப உறவுகள் திருமணத்தினூடாகக் கட்டமைக்கப்படுகின்றன. அக்குடும்ப விருத்தியின் பேறாக மக்கட்பேறு கிடைக்கின்றது. இத்தகைய குடும்ப உறுப்பினர்களின் தனிமனித, சமூக ஒழுக்கங்கள் அல்குர்ஆன் மற்றும் ஹதீஸ் முதலிய இஸ்லாமிய உயர்ந்த இலக்கியங்களில் நல்லறங்களாக வலியுறுத்தப்பட்டுள்ளன. அவ்வாறு வலியுறுத்தும் குடும்ப உறுப்பினர்களின் கடமைகளை ஆராய்ந்து, அவை இல்லறவாழ்விற்கு எவ்வகையில் துணைசெய்கின்றன என்பதை இஸ்லாமிய இலக்கியங்களின் வழி நிறுவதே இவ்வாய்வின் நோக்காகும். இஸ்லாம் மார்க்கத்தினைக் கடைப்பிடிக்கும் ஒவ்வொரு குடும்ப உறுப்பினர்களும் தம் இல்லறவியல் கடமைகளை இஸ்லாமிய ஒழுக்கத்தின் வழி வாழ்ந்து நிறைவேற்றினால் சொர்க்கத்தை அடையலாம் என்ற உயர்ந்த இலட்சியம், ஆய்வு முடிவாகக் கூறப்பட்டுள்ளது. இவ்வாய்விற்குரிய தரவுகளாக அல்குர்ஆன், ஹதீஸ் முதலியவற்றுடன் இஸ்லாமியக் கட்டுரை நூல்கள், இதழ்கள், மின்னூடகக் கருத்துக்கள் போன்றவையும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வானது இஸ்லாமியச் சமூக ஆய்வாளர்கள், சமூக அமைப்புக்கள், குடும்ப ஆலோசனை வழிகாட்டல் அலுவலர்கள் முதலியோருக்கு, ஆய்வுகளை மேற்கொள்ள மேலதிக ஆய்வுத்தரவாக அமையும் என நம்பலாம்.*

**திறவுச்சொற்கள்:** இஸ்லாம், குடும்பம், கடமைகள், அல்குர்ஆன், ஹதீஸ்

## ஆய்வு அறிமுகம்

உலகப் பிறப்பின் இலட்சியத்தினை மனிதன் அடைவதற்காக, அல்லாஹ் காலத்துக்குக் காலம் நபிமார்களையும், ரஸூல்மார்களையும் அனுப்பி வைத்து, அவர்களினூடாகத் தன்னுடைய வேதங்களையும், கட்டளைகளையும் அருளியுள்ளான். இஸ்லாமிய சமூகம் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு குர்ஆனையும், முஹம்மது நபி (ஸல்) அவர்களின் சொல், செயல் முதலியவற்றின் தொகுப்பான ஹதீஸ் மூலாதாரத்தினையும் அடிப்படையாகக் கொண்டு வாழும் ஒரு சமூகமாகும். அத்தகைய சமூகத்தில் குடும்ப அலகு என்பது முக்கியமானதாகும். மனிதனின் அடிப்படைச் சமூக நிறுவனமாகவே அக்குடும்பம் விளங்குகின்றது. அக்குடும்ப உறவுகள் திருமணத்தினூடாகக் கட்டமைக்கப்படுகின்றது. எனவே ஆண்-பெண் எனும் இரு வேறுபட்ட தரப்பினரின் சேர்க்கையாகவே சமூகத்தின் முதன்மை அத்திவாரமாகிய குடும்பம்

என்ற சமூக அமைப்பு தோற்றம் பெறுகின்றது. அக்குடும்ப விருத்தியின் பேறாக மக்கட்பேறு கிடைக்கின்றது. அது மேலும் வளர்ச்சியடைந்து கூட்டுக்குடும்பமாகமாறவும் வழிகோலுகின்றது. இத்தகைய குடும்ப உறுப்பினர்களின் தனிமனித, சமூக ஒழுக்கங்கள் அல்குர்ஆன் மற்றும் ஹதீஸ் முதலிய இஸ்லாமிய உயர்ந்த இலக்கியங்களில் நல்லறங்களாக வலியுறுத்தப்பட்டுள்ளன. அவ்வறங்களின் வழியே இஸ்லாமியர்கள் வாழ்ந்து இல்வாழ்வின் இலக்கினை அடையவேண்டும். எனவே இஸ்லாம் போதிக்கும் குடும்ப உறுப்பினர்களின் கடமைகளை, அல்குர்ஆன், ஹதீஸ் முதலிய மகத்துவமான இலக்கியங்களின் வழி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**ஆய்வு நோக்கம்**

இஸ்லாம் வலியுறுத்தும் குடும்ப உறுப்பினர்களின் கடமைகளை ஆராய்ந்து, அவை இல்லறவாழ்விற்கு எவ்வகையில் துணைசெய்கின்றன என்பதை, இஸ்லாமிய இலக்கியங்களின் வழி நிறுவதே இவ்வாய்வின் நோக்காகும்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது பண்புசார் முறை, விபரணப் பகுப்பாய்வு முறை ஆகிய அணுகுமுறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்விற்கு அல்குர்ஆன், ஹதீஸ் மற்றும் இஸ்லாமியக் கட்டுரை நூல்கள், இதழ்கள், மின்னூடகக் கருத்துக்கள் முதலியவை ஆய்வுத்தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**குடும்பம்**

ஒரு குடும்பம் என்பது, கணவன்-மனைவி, அவர்களது பிள்ளைகள் சேர்ந்து வாழும் சிறிய சமூக அலகைக் குறிக்கிறது. அது திருமண உறவால் அமைந்த ஓர் உறைவிடக் குழுவாகும். சமூகத்தின் மூலக்கூறு எனவும் அது மானிட சமூகத்தின் சிறிதாக்கப்பட்ட வடிவம் எனவும் கூறப்படுகின்றது. பாலுணர்ச்சியால் நிலைத்து நிற்கக் கூடியதும், இனப் பெருக்கத்தின் மூலமாக குழந்தை வளர்க்கும் தன்மை வாய்ந்ததுமான குழுவாகும். கூட்டுக்குடும்பம் என்பது தங்களது பெற்றோர், சகோதரர்கள் ஆகியோருடன் இணைந்து ஒரே குடும்பமாக வாழ்வது ஆகும். ஒரு குடும்பத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் தங்களுக்கிடையே பரஸ்பரம் இணக்கமாக வாழ்ந்து, ஒருவர் மற்றவரின் தேவைகளை நிறைவுசெய்ய வேண்டும். உண்மையான இறைநம்பிக்கை, ஒரு மனிதன் இறைவனின் உரிமைகளை மதித்து, கடமையாற்றுவதில் மட்டும் அடங்கி விடவில்லை. குடும்பத்தாரின் உரிமைகளை மதித்து செயலாற்றுவதிலும் அடங்கி உள்ளது என்பதை இஸ்லாம் வலியுறுத்தியுள்ளது.

இஸ்லாமிய திருமணம் என்பது மாலைகளை மாற்றுவதோ, மோதிரங்களை மாற்றுவதோ, அல்ல. அது ஒரு குடும்ப உறவுகளை விருத்தி செய்யும் நிகழ்வாகும். இதுகுறித்து திருக்குர்ஆன் (4 : 21) குறிப்பிடும்போது, ''உங்களிடமிருந்து அவள் உறுதியான வாக்குறுதி பெற்று, ஒருவர் மற்றவருடன் கலந்து விட்டீர்களே'' என்று தெரிவிக்கின்றது. இருவரும் அவரவர் உரிமையில் குறையேதும் வைக்கக் கூடாது. இவ்வாறு மணப்பந்தத்தில் இணைந்தவர்கள் இஸ்லாமிய தர்மத்தின் படி வாழ்ந்து நல்லறமாற்ற வேண்டியதையும்

அவர்கள் ஒவ்வொருவரும் தமக்குரிய இல்லறக்கடமைகளில் தவறக்கூடாது என்றும் இஸ்லாம் வலுயுறுத்துகின்றது.

**இல்வாழ்வானின் கடமைகள்**

தனிமனித மற்றும் சமூக நலனின் பொருட்டு குடும்பத்தலைவனின் கடமைகளை இஸ்லாம் வரையறை செய்துள்ளதை நோக்கலாம். குறிப்பாக மனையாளோடு குடும்பம் நடத்தும் பொது எவ்வாறான சமத்துவத்தினைப் பின்பற்ற வேண்டும் என்பது இங்கு முக்கியமாகின்றது. கணவன் திருமணத்திற்குப் பின்பு தம் மனைவியுடன் பழகுவதிலும் அவளை வழிநடத்துவதிலும் இஸ்லாம் கற்பிக்கும் நெறி முறைகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும். மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமைகள், அவளுடன் நல்ல முறையில் பழகுவது, அவளைக் கண்ணியமாக நடத்துவது ஆகியவை குறித்து இஸ்லாம் போதிக்கும் நல்லுரைகள் சிறப்புக்குரியன. இஸ்லாம், உலகின் எந்த மார்க்கமும் அளித்தராத உயரிய அந்தஸ்தைப் பெண்களுக்கு வழங்கியுள்ளமை இங்கு உற்றுநோக்கத்தக்கது. உதாரணமாக, ‘‘நான் நபி (ஸல்) அவர்களிடம் ‘அல்லாஹ்வின் தூதரே! எங்களில் ஒருவர் அவர் தம் மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமை என்ன?’ என வினவினேன். அதற்கு நபிகளார், ‘நீர் சாப்பிடுவதை அவளுக்குச் சாப்பிடக் கொடுக்க வேண்டும். நீர் அணியும் உடையை அவளுக்கும் அணிவிக்க வேண்டும் மேலும் நீர் அவளின் முகத்தில் அடிக்கக்கூடாது. அவளைக் கேவலமாகவும் பேசக்கூடாது. அவளை வீட்டில் தவிர வேறெங்கும் வெறுத்து ஒதுக்கக்கூடாது என நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள்’’. (அஹ்மது) என்ற திருக்கூற்றின் வழி குடும்பப் பெண் சமத்துவமாக மதிக்கப்பட வேண்டும் என்ற சிந்தனை முன்வைக்கப்பட்டுள்ளதை நோக்கலாம். மேலும்,

நபி (ஸல்) அவர்கள் பயணத்தில் தமது மனைவியரை எப்போதும் அழைத்துச் செல்வார்கள். (புகாரி) இது ஒரு கணவன் தமது மனைவிக்குச் செலுத்த வேண்டிய நியாயமான உரிமையை வலியுறுத்துகின்றது. அதுமட்டுமன்றி ‘‘உங்கள் வசதிக்கேற்ப அவர்களை நீங்கள் குடியிருக்கும் இடத்தில் வைத்திருங்கள். அவர்களுக்கு நெருக்கடியை ஏற்படுத்தி, அவர்களுக்குத் தீங்கு செய்யாதீர்கள். அவர்கள் கர்ப்பிணிகளாக இருந்தால் அவர்கள் பிரசவிக்கும் வரை அவர்களுக்காகச் செலவிடுங்கள். வசதியுள்ளவர் தனது வசதிக்கேற்ப செலவிடட்டும். யாருக்குச் செல்வம் அளவாகக் கொடுக்கப்பட்டதோ அவர் தனக்கு அல்லாஹ் வழங்கியதிலிருந்து செலவிடட்டும்’’ (திருக்குர்ஆன் 65 : 6,7) என்ற திருமறை வாக்கியமும் முக்கியமானதாகும். பெண்கள் உடலமைப்பில் மென்மையானவர்கள் அதனால் அவர்களை நாம் நோகடிக்கக் கூடாது. இதனை, ‘‘பெண், விலா எலும்பைப் போன்றவள். அவளை நீ நிமிர்த்தினால் ஒடித்து விடுவாய். அவளிடம் நீ இன்பத்தை அடைய நாடினால், அவளிடம் குறையுள்ள நிலையிலேயே இன்பத்தை அடைந்து கொள்வாய்.’’ (புகாரி, முஸ்லிம்) என்ற கூற்றின் மூலம் அறியலாம்.

இல்வாழ்வான் பெண்களின் இயல்புகளைத் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். பூரணமானது அல்லது சரியானது எனத், தாம் நினைக்கும் முறையில் அவளைத் திருத்திவிட முயலக் கூடாது. பெண்மைக்கென்று அமைந்துள்ள இயற்கைப் பண்புகளைக் கவனத்தில்

கொள்ள வேண்டும். அவளை, அல்லாஹ் எந்த இயல்புடன் படைத்தானோ அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது இங்கு வெளிப்படுத்தப்படுகின்றது. ''முஸ்லிமான பெண்ணை அவளது கணவர் எவ்வளவுதான் வெறுத்தாலும் அவளிடம் விரும்பத் தகுந்த பல நற்குணங்கள் இருந்தே தீரும். எனவே, அந்தக் கணவர் தமது மனைவியிடம் தமக்கு திருப்தி அளிக்கும் நற்குணங்கள் இருப்பதை மறந்துவிடக் கூடாது. அவளிடம் உள்ள வெறுக்கத்தக்க குணங்களைச் சுட்டிக் காட்டித் திருத்தவும் தவறக்கூடாது'' என மகத்தான சிந்தனையை இறைத்தூதர் அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்கள். இதனாலேயே, ''அல்லாஹ்வின் திருப்தியை மட்டுமே நாடி நீர் எதைச் செலவு செய்தாலும் அதற்காகக் கூலி வழங்கப்படும். உமது மனைவியின் வாயில் நீர் ஊட்டும் உணவுஉட்பட'' (புகாரி) என்று அல்லாஹ்வின் தூதர் அவர்கள் கூறியுள்ளார்.

''அன்பார்ந்த கணவன்மார்களே… நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாளர்கள். தன் பொறுப்புக்கு உட்பட்டவை பற்றி விசாரிக்கப்படுவீர்கள். குடும்பத் தலைவன் தன் மனைவி மக்களின் பொறுப்பாளன் ஆவான். தன் பொறுப்புக்கு உட்பட்டவர்கள் பற்றி அவன் விசாரிக்கப்படுவான்'' (புகாரி) என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளமை இல்வாழ்வானின் கடமைகளை வலுப்படுத்தியுள்ளது எனலாம். மேலும் ''இவ்வுலகம் முழுவதும் பயனளிப்பது செல்வங்களே! அச்செல்வங்களில் மிகவும் மேலானது நல்ல மனைவியே!'' (முஸ்லிம்) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். ''இறை நம்பிக்கை கொண்டவர்களில் முழுமையான இறை நம்பிக்கை கொண்டவர் அவர்களில் நற்குணம் உள்ளவர்கள் தான்! உங்களில் சிறந்தவர் உங்கள் மனைவியரிடம் நற்பண்பால் சிறந்து விளங்குபவரே!'' என்றும் அவர் கூறியுள்ளமை மனையாளின் முக்கியத்துவத்தினைப் புலப்படுத்துகின்றது. தம் குழந்தைகளுக்குப் பால்குடியை நிறைவு செய்ய வேண்டும் என்று தந்தையர்களில் யாராவது விரும்பினால், தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு இரண்டாண்டு காலம் முழுமையாகப் பாலூட்ட வேண்டும். (இந்நிலையில்) அத்தாய் மார்களுக்கு நல்ல முறையில் உணவளிப்பதும், உடை கொடுப்பதும் குழந்தைகளின் தந்தையர்க்குரிய பொறுப்பாகும். (அல்குர்ஆன் : 2 : 233) என்றும் குடும்பத்தவனின் கடமைகளைத் திருமறை வலியுறுத்தியுள்ளது. இதன் மூலம் மனைவிக்கு செலவு செய்வது அவசியம், என்ற கருத்து நபிமொழிகளில் தெள்ளத் தெளிவாக உணர்த்தப்பட்டுள்ளது.

நேரிய மார்க்கமான இஸ்லாம், பெண்ணுக்கு நீதி வழங்குவதிலும் அவளைக் கண்ணியப் படுத்துவதிலும் ஏனைய மார்க்கங்களைப் பார்க்கிலும் மிக உயர்ந்தே நிற்கிறது. அவளைக் கணவன் வெறுத்தாலும் அவளுடன் நல்ல முறையிலேயே நடந்து கொள்ள வேண்டும் என உபதேசிக்கிறது. பெண்கள், தங்களது வரலாற்றில் இஸ்லாமைத் தவிர வேறெங்கும் இந்தக் கண்ணியத்தை அடைந்து விட முடியாது என்றே கூறலாம். இவ்வாறு இல்வாழ்வில், மனையாளின் பேணுதலே இல்வாழ்வானுக்குரிய முக்கிய கடமையாக வலியுறுத்தப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

**மனையாளின் கடமைகள்**

குடும்பத்தில் கணவனோடு இணைந்து, இன்பதுன்பங்களில் நல்லறமாற்றவேண்டிய கடமை மனையாட்டியைச் சேர்கிறது. ''அவள் தன் கணவனுக்கும், அவனுடைய குழந்தைகளுக்கும் பொறுப்பாளி ஆவாள். தன் பொறுப்புக்கு உட்பட்டவை குறித்து அவள் விசாரிக்கப்படுவாள்'' (புகாரி) என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். ''மனைவி மீது கணவனுக்கு இருக்கும் உரிமை போன்று மனைவிக்கும் உரிமை இருக்கிறது'' (அல்குர்ஆன்: 2: 228) என்றும் இஸ்லாம் கூறுகிறது. மேலும், வீட்டிற்கு வருகைதரும் கணவனை அன்புடன் வரவேற்று மகிழ்வுடன் உபசரித்தல் வேண்டும். அவனின் அனுமதியின்றி வெளியே செல்லக்கூடாது என்றும் மனைவியின் கடமைகள் கூறப்பட்டுள்ளன.

''அல்லாஹ்வின் தூதரே! ஒரு பெண் யாருக்கு அதிகம் கடமைப்பட்டுள்ளாள் என்ற கேள்விக்கு, அவளின் கணவருக்கு'' என நபி (ஸல்) பதிலளித்தமையும் முக்கிய விடயமாகும். ''சிறந்த பெண் யாரென்றால்! நீ அவளைப் பார்க்கும் போது அவள் உன்னை சந்தோசப்படுத்துவாள். நீ அவளுக்கு ஆணையிட்டால், அவள் உனக்குக் கட்டுப்படுவாள். நீ அவளை விட்டும் மறைந்துவிட்டால், அவள் உனது செல்வத்தையும், தமது கற்பையும் பாதுகாப்பாள்'' (நஸயீ) என நபி (ஸல்) கூறுவதிலிருந்து பெண் எக்காலத்திலும் கற்பினைப் போற்றிக் காப்பவளாக இருக்கவேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

மனையாளின் இல்லறக் கடமைகளில் முக்கியமான ஒன்று, கணவனுக்கு மனைவி கட்டுப்படுதல் ஆகும். அதுமட்டுமல்லாமல் இஸ்லாமிய மார்க்கத்திற்கு முரண்இல்லாத அனைத்துக் கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பதும் மனைவியின் கடமையாகும். இதை அல்லாஹ் ''கட்டுப்பட்டு நடப்போரும், அல்லாஹ்வின் பாதுகாவல் மூலம் மறைவானவற்றைக் காத்துக் கொள்வோருமே நல்ல பெண்கள்'' என்று குறிப்பிடுகிறார். கணவனுக்குக் கட்டுப்படுதல் பற்றி நபி (ஸல்) அவர்கள், ''நான் ஒருவருக்கு ஸஜ்தா செய்ய (சிரம் பணிய) கட்டளையிடுபவனாக இருந்திருந்தால் பெண்ணை அவள் கணவனுக்கு ஸஜ்தா செய்யுமாறு கட்டளையிட்டிருப்பேன்''. (திர்மிதீ) என்று கூறுகின்றார். எனவே இந்த இறைக் கட்டளையை ஏற்று, மனைவி கணவனுக்குக் கட்டுப்பட்டு நடப்பது அவசியமாகும்.

அத்துடன் கணவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளில் முதல் கடமை கணவனின் இடத்தில் மற்றொரு ஆணை வைக்காமல் இருப்பதாகும். தன் கற்பொழுக்கத்தைப் பேணுவதாகும். கணவனுக்குக் கடும் கோபத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்துவதில் முதலிடம் வகிப்பது இந்த ஒழுக்கம் சார்ந்த நடவடிக்கைகள் தான் என்பதை பெண்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். ''தமது பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறும் தமது கற்புகளைப் பேணிக் கொள்ளுமாறும் நம்பிக்கை கொண்ட பெண்களுக்குக் கூறுவீராக'' (அல்குர்ஆன் 24 : 31) என்ற திருமறைக்கூற்று சிறப்பானது. மேலும், ''இஸ்லாம் மீது நம்பிக்கை கொண்ட ஆண்களும், பெண்களும், உண்மை பேசும் ஆண்களும், பெண்களும், பொறுமையை மேற்கொள்ளும் ஆண்களும், பெண்களும், அடக்கமாக நடக்கும் ஆண்களும், பெண்களும், தர்மம் செய்யும் ஆண்களும், பெண்களும், நோன்பு நோற்கும் ஆண்களும், பெண்களும்,


ISBN 978-624-5736-14-0

தமது கற்பைக் காத்துக் கொள்ளும் ஆண்களும், பெண்களும், அல்லாஹ்வை அதிகம் நினைக்கும் ஆண்களும், பெண்களும் அல்லாஹ்வன் மன்னிப்பையும், மகத்தான கூலியையும் பெற்றுக்கொள்வார்கள்.'' (அல்குர்ஆன் 33:35) என்ற திருமறையின் வாக்கும் பெண்கள் எப்படி வாழ வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது.

பெண்களின் ஒழுக்கத்திற்குக் கேடு விளைவிக்கும் பல காரியங்களை இஸ்லாம் தடுத்துள்ளது. பெண்கள் ஆண்களைக் கவரும் வண்ணம் அலங்காரங்களை அந்நியர்களுக்கு வெளிப்படுத்தக் கூடாது. தன் அலங்காரங்களை கணவனுக்கு மட்டுமே காட்டும் வண்ணம் அமைத்துக் கொள்ள வேண்டும். ''தமது பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறும் தமது கற்புகளைப் பேணிக் கொள்ளுமாறும் நம்பிக்கை கொண்ட பெண்களுக்குக் கூறுவீராக! தமது அலங்காரத்தில் வெளியே தெரிபவை தவிர மற்றவற்றை வெளிப்படுத்த வேண்டாம். தமது முக்காடுகளை மார்பின் மேல் போட்டுக் கொள்ளட்டும். தமது கணவர்கள், தமது தந்தையர், தமது கணவர்களுடைய தந்தையர், தமது புதல்வர்கள், தமது கணவர்களின் புதல்வர்கள், தமது சகோதரர்கள், தமது சகோதரர்களின் புதல்வர்கள், தமது சகோதரிகளின் புதல்வர்கள், பெண்கள், தங்களுக்குச் சொந்தமான அடிமைகள், (தள்ளாத வயதின் காரணமாக பெண்கள் மீது) நாட்டமில்லாத பணியாளர்கள், பெண்களின் மறைவிடங்களை அறிந்து கொள்ளாத குழந்தைகள் தவிர மற்றவர்களிடம் தமது அலங்காரத்தை அவர்கள் வெளிப்படுத்த வேண்டாம். அவர்கள் மறைத்திருக்கும் அலங்காரம் அறியப்பட வேண்டுமென்பதற்காக தமது கால்களால் அடித்து நடக்க வேண்டாம். நம்பிக்கை கொண்டோரே! அனைவரும் அல்லாஹ்வை நோக்கித் திரும்புங்கள்! இதனால் வெற்றியடைவீர்கள்'' (அல்குர்ஆன் 24 : 31) என்ற திருமறைக்கூற்று பெண் எப்படி ஒழுக வேண்டும் என்ற நற்சிந்தனைகளை வெளிப்படுத்தியுள்ளது.

மேலும், ''நபியே! உமது மனைவியருக்கும், உமது புதல்வியருக்கும், (ஏனைய) நம்பிக்கை கொண்ட பெண்களுக்கும் முக்காடுகளைத் தொங்கவிடுமாறு கூறுவீராக! அவர்கள் (ஒழுக்கமுடைய பெண்கள் என்று) அறியப்படவும், தொல்லைப்படுத்தப்படாமல் இருக்கவும் இது ஏற்றது'' அல்லாஹ் மன்னிப்பவனாகவும், நிகரற்ற அன்புடையோனாகவும் இருக்கிறான். (அல்குர்ஆன் 33 : 59) என்ற மறை வசனத்தினூடாகப் பெண்ணின் ஆடைஅலங்காரங்கள் எப்படி இருக்க வேண்டும் என்ற கருத்து வெளிப்படுத்தப்படுகின்றது. உதட்டுச் சாயம் பூசுவது, நகைகளால் அலங்கரிப்பது, அலங்காரப் பொருட்களைப் பயன்படுத்துவது, ஆடைகளால் அழகை அதிகரிப்பது, இவை 'ஜீனத்' என்ற சொல்லில் அடங்கும். மற்றவர்களுக்கு முன் இதுபோல அலங்காரம் செய்த நிலையில் பெண்கள் காட்சி தரக் கூடாது.

அத்துடன் பின்வரும் கூற்றும் முக்கியமானதாகும். ''இரு பிரிவினர் நரகவாசிகளில் அடங்குவர். பசு மாட்டின் வாலைப் போன்ற சாட்டைகளைத் தம்மிடம் வைத்துக் கொண்டு மக்களை அடிப்பவர்கள். மெல்லிய உடையணிந்து தம் தோள்களைச் சாய்த்து நடந்து அந்நிய ஆடவர்களின் கவனத்தை தன் பால் ஈர்க்கக் கூடிய பெண்கள். அவர்கள் சொர்க்கத்தில் நுழைய மாட்டார்கள். சொர்க்கத்தின் வாடையைக் கூட நுகர மாட்டார்கள். (முஸ்லிம்) எனவே பெண்கள் தமது ஒழுக்கத்தினை தம் உடைமைகளாலும் காத்துக்கொள்ள வேண்டும் என்ற

சிந்தனையை இஸ்லாம் முன்வைக்கின்றது. அத்துடன் ''ஒரு பெண் ஐவேளைத் தொழுகைகளையும், ரமலான் மாத நோன்பையும் நிறைவேற்றித் தமது கற்பையும் பாதுகாத்து, கணவனுக்கும் கட்டுப்பட்டு நடந்தால், அவள் சொர்க்கத்தில் நுழையலாம்'' (அஹ்மது) என்ற நபி (ஸல்) அவர்களின் கூற்றின் மூலம், ஒரு மனையாள் தன்இல்வாழ்க்கைக்குரிய கடமைகளை, இஸ்லாமிய ஒழுக்கத்தின் வழி வாழ்ந்து நிறைவேற்றினால் சொர்க்கத்தை அடையலாம் என்ற உயர்ந்த இலட்சியமும் இங்கு கூறப்பட்டுள்ளமையும் நோக்கத்தக்கது. எனவே பெண்கள் ஒழுக்கமுடைமை உடையவர்களாக வாழப்பழக வேண்டும்.

**பெற்றோரின் மகப்பேற்றுக் கடமைகள்**

உலக வாழ்வில் மனிதனுடைய மிகப் பெரும் எதிர்பார்ப்பும் ஆசையாகக் காணப்படுவது அவனுக்கு சிறந்த குழந்தைப் பாக்கியம் கிட்டவேண்டும் என்பதுதான். ஏனெனில் நபிமார்களுடைய எதிர்பார்ப்பாகவும் அது இருக்கிறது. "மனிதனுக்கு மகிழ்ச்சியையும், இன்பத்தையும், கண்குளிர்ச்சியையும், மன நிறைவையும், பெற்றுத்தருவதுடன் அவனது வாழ்வை அலங்கரிக்கக் கூடியவர்கள் பிள்ளைகளே, அவனது அந்திமக் காலங்களில் அவனுக்கு ஆறுதலாகவும் துணையாக இருப்பவர்கள் குழந்தைகளே'' என்று அல்லாஹ் அல்குர்ஆனில் கூறியுள்ளமை சிறப்புக்குரியது. பெற்றோரும் தமது குழந்தைகளுக்கு செய்யவேண்டிய நிறைய கடமைகள் உள்ளன. அதை கவனத்தில் கொண்டு பெற்றோரும் நடந்து கொள்ள வேண்டும். நல்லொழுக்கம் கற்றுக்கொடுத்து, கண்டிப்புடன் கூடிய இரக்கம் காட்டி வளர்க்க வேண்டும். பிள்ளைகளின் வளர்ச்சியில் பெற்றோரின் பங்கு அதிகம் இருக்க வேண்டும். பிள்ளைகளுக்கு அறம் சார்ந்த விடயங்களையும், மார்க்கம் சம்பந்தமான விடயங்களையும், நீதி போதனைகளையும் போதித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

பெற்றோர் குழந்தைகளிடம் மனம் விட்டு பேசி, அவர்களிடம் அதிகமான நேரங்களை செலவிட வேண்டும். அவர்களுக்கு இறைநம்பிக்கை, தொழுகை, நோன்பு போன்ற இஸ்லாமியக் கடமைகளில் ஈடுபாட்டை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பருவ வயதை அடைந்த குழந்தைகள் செல்லும் பாதை சொர்க்கத்தின் பாதையாக இருப்பதை பெற்றோர் உறுதி செய்ய வேண்டும். நரகத்தின் படுகுழியாக இருக்காமல் பாதுகாப்பது பெற்றோரின் கடமையாகும். ''நம்பிக்கை கொண்டோரே! உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் நரகை விட்டுக்காத்துக் கொள்ளுங்கள்.'' (திருக்குர்ஆன் 66 : 6)எனக் குழந்தைகளின் உரிமையை மதித்து நடப்பது இறைநம்பிக்கை சார்ந்த பகுதி என்று திருமறை கூறியுள்ளது.

ஒரு பிள்ளைமீது பெற்றோருக்கு உள்ள பொறுப்புகள் அப் பிள்ளை பிறப்பதற்கு முன்னரே ஆரம்பிக்கிறது. தனது பிள்ளைக்கான சிறந்த, இறை அச்சமுள்ள, அறிவுடைய, வாழ்வில் இலட்சியமுடைய, கணவனுக்கும் தனது பிள்ளைகளுக்கும் செய்ய வேண்டிய கடமைகள் பொறுப்புக்களை நன்கு உணர்ந்த தாயை தெரிவு செய்ய வேண்டும் என்பதனை இஸ்லாம் வலியுறுத்துகிறது. "ஒரு பெண் நான்கு விடயங்களுக்காக திருமணம் செய்யப்படுகிறாள். அவளது செல்வத்திற்காக, அவளது பரம்பரை அந்தஸ்திற்காக, அவளது அழகிற்காக, அவளிடம் உள்ள மார்க்கத்திற்காக. மார்க்கமுள்ள பெண்ணைத் திருமணம் செய்து கொள்!''

(புஹாரி, முஸ்லிம்) என்று நபி (ஸல்) மிகச் சுருக்கமாக கூறியுள்ளார். அதேபோல ஒரு தாயும் தனது குழந்தைக்கான சிறந்த மார்க்க உணர்வுள்ள, தனது பொறுப்புக்களை சரிவர உணர்ந்த ஒருவரையே தந்தையாகத் தெரிவு செய்ய வேண்டும் என்றும் நபி (ஸல்) அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

தனது பிள்ளைக்கான சிறந்த தாயை தந்தையை தேடுவதோடு மாத்திரம் பிள்ளைகளுக்கு செய்யவேண்டிய கடமைகள் நிறைவடைவதில்லை. மாறாக, பிள்ளை பிறந்தவுடன் நிறைவேற்றவேண்டிய அகீகா, மற்றும் மிகச் சிறந்த அர்த்தமுள்ள பெயரைச் சூட்டுவதிலிருந்து ஆரம்பித்து, பெற்றோர் பிள்ளைக்கு அனைத்து விடயங்களிலும் முன்மாதிரியாக இருத்தல், அவர்களுக்கு சிறந்த கல்வியை புகட்டல், இறை வணக்கத்தில் ஆர்வத்தையும் ஊக்கத்தையும் ஏற்படுத்தல், அவர்களது ஆரோக்கியத்தில் கூடிய கவனமெடுத்தல், பிள்ளைகளுக்காக செலவு செய்தல், அவர்களுடன் அன்பாகவும், மென்மையாகவும் நடத்தல், அவர்களை சரியான முறையில் நெறிப்படுத்தல் என பெற்றோரின் பொறுப்புக்கள் நீண்டு கொண்டே செல்கின்றன.

நபி (ஸல்) அவர்கள் தனது பேரக்குழந்தைகளின் ஆரோக்கியத்தின் விடயத்தில் மிகக் கவனமாக இருந்தார்கள், இது விடயமாக தனது மகள் மற்றும் மருகனை அறிவூட்டக் கூடியவராகவும் இருந்தார்கள். ''ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் பாத்திமா றழியல்லாஹூ அன்ஹா அவர்களின் வீட்டுக்கு சென்றார்கள். அப்போது எனது பிள்ளைகள் (ஹஸனும் ஹூஸைனும்) எங்கே எனக்கேட்டார்கள், அவர்களை அலி றழியல்லாஹூ அன்ஹூ அவர்கள் அழைத்துச் சென்றிருப்பதாக கூறினார்கள், அப்போது நபி (ஸல்) அவர்கள், அவர்கள் இருக்கும் இடத்திற்கு சென்றார்கள், அப்போது அவர்கள் இருவரும் ஒரு நீர் நிலைக்குப் பக்கத்தில் விளையாடிக் கொண்டிருந்தனர், அவர்களது கையில் சிறிதளவான பேரீச்சம் பழம் காணப்பட்டன, அப்போது நபி (ஸல்) அவர்கள் அலியே வெயில் கடுமையாகி உஷ்ணம் அதிகரிக்க முன்னர் எனது பிள்ளைகளை திருப்பி அனுப்பக் கூடாதா? எனக் கேட்டார்கள்'' (ஹாகிம்) கடும் வெப்பமும் உஷ்ணமும் பிள்ளைகளின் ஆரோக்கியத்தை பாதித்து விடக் கூடாது என்பதில் கவனமாக இருந்திருப்பதை இதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

பிள்ளைகளுக்கு அன்பு காட்டும் விடயத்திலும் பெற்றோர் கவனமெடுக்க வேண்டும், அன்பின் வெளிப்பாடுதான் பிள்ளைகளை கட்டியணைத்தலும் முத்தமிடுதலும். ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள் அல் அக்ர.ஃ இப்னு ஹாபிஸ் றழியல்லாஹூ அன்ஹூ அவர்களுடன் அமர்ந்திருந்தார்கள், அப்போது ஹஸன் றழியல்லா ஹூ அன்ஹூ அவர்களை முத்தமிட்டார்கள், அதனைப் பார்த்த அக்ர.ஃ எனக்கு பத்துக் குழந்தைகள் உள்ளனர். அவர்களுள் ஒருவரையேனும் நான் முத்தமிட்டதில்லை எனக் கூறினார். அப்போது அவரைப் பார்த்து நபி (ஸல்) அவர்கள், ''இரக்கம் காட்டாதவர் இரக்கம் காட்டப் பட மாட்டர்'' எனக் கூறினார்கள். மேற்குறிப்பிடப்பட்டது போல அதிகமான அல்குர்ஆன் வசனங்களும், நபி மொழிகளும், எமது முன்னோரின் வாழ்வில் நிகழ்ந்த சம்பவங்களும், பிள்ளைகள்மீது பெற்றோருக்குள்ள கடமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாகப் பேசுகின்றன, இவற்றை பின்பற்றி தமது பிள்ளைகளை வளர்க்கும் பெற்றோருக்கு அதன் பலனை இவ்வுலகிலும், மறுமையிலும் இறைவன் வழங்குவான் என்பது உண்மை.

**குழந்தைகளின் கடமைகள்**

இறைவனுக்கு அடுத்தபடியாக குழந்தைகள் அதிகம் கடமைப்பட்டிருப்பது அவர்களின் பெற்றோருக்கே ஆகும். இறைவனின் விருப்பமும் அதுதான். ''என்னைத் தவிர யாரையும் வணங்காதீர்கள். பெற்றோருக்கு உபகாரம் செய்யுங்கள்'' என இறைவன் கட்டளையிட்டுள்ளான். ''உம்முடன் இருக்கும் பெற்றோரில் இருவருமோஅல்லது ஒருவரோ முதுமையை அடைந்துவிட்டால் அவர்களை நோக்கி 'சீ' எனக் கூறாதீரகள். அவ்விருவரையும் விரட்டாதீர்கள். மரியாதையான சொல்லையே அவ்விருவரிடமும் கூறுவீராக. அன்புடன் பணிவீராக. 'சிறுவனாக இருக்கும் போது என்னை இருவரும் பராமரித்தது போல் இறைவா, இவ்விருவருக்கும் அருள்புரிவாயாக' என்று கேட்பீராக'' (திருக்குர்ஆன் 17:23,24) என்ற குர்ஆன் வசனங்கள் பெற்றோரை மதித்துக் காக்க வேண்டிய பொறுப்பை வலியுறுத்துகின்றன.

பெற்றோரின் உரிமைகளை மதித்து, அவர்களை மரியாதையாக நடத்தினால், பிள்ளைகளின் எதிர்காலம் நலமாக அமையும். இறைவனுக்கு மாறு செய்வதைத் தவிர்த்து, அவர்களின் மற்ற அனைத்து பேச்சுக்களையும் கேட்டு நடக்க வேண்டும். வயோதிப பருவத்தில் அவர்களுக்குக் கைத்தாங்கலாக இருந்து உதவிட வேண்டும். அவர்களை அருகில் வைத்துப் பாதுகாக்க வேண்டும். அவர்களுக்கு பிள்ளைகளிடமிருந்து கிடைக்கும் அனைத்து உரிமைகளையும் குறைவில்லாமல் நிலைநாட்ட வேண்டும். இவ்வாறு நடந்து கொள்ளும் முறைதான் இறைநம்பிக்கை ஆகும். ''மனிதனுக்கு அவனது பெற்றோரைக் குறித்தும் வலியுறுத்தியுள்ளோம். அவனை, அவனது தாய் பலவீனத்துக்கு மேல் பலவீனப்பட்டவளாகச் சுமந்தாள். அவன் பாலருந்தும் பருவம் இரண்டு ஆண்டுகள். எனக்கும், உனது பெற்றோருக்கும் நன்றி செலுத்துவாயாக! என்னிடமே திரும்பி வருதல் உண்டு.'' (அல் குர்ஆன் 31 : 14) என்ற திருமறைக்கூற்று நோக்கத்தக்கது.

''அப்துல்லாஹ் பின் மஸ்வூத் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள், நான் நபி (ஸல்) அவர்களிடம் 'அல்லாஹ்வின் நபியே நற்செயல்களில் சொர்க்கத்திற்கு மிகவும் நெருக்கமானது எது?' என்று கேட்டேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள் 'தொழுகையை உரிய நேரத்தில் நிறைவேற்றுவது?' என்று கூறினார்கள். 'அடுத்து எது? அல்லாஹ்வின் தூதரே! என்று கேட்டேன். அதற்குத் 'தாய் தந்தையருக்கு நன்மை புரிவது' என்றார்கள். 'அடுத்தது எது? அல்லாஹ்வின் தூதரே!' என்று கேட்டபோது, 'அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் புரிவது' என்றார்கள். (முஸ்லிம்) இதன் மூலம் தாய்தந்தையரைப் போற்றிப் பேணவேண்டிய அவசியத்தினைத் தெரிந்துகொள்ள முடிகின்றது.

அல்லாஹ்வின் தூதர் அவர்கள், அழகிய முறையில் உறவாடுவதற்கு மிகவும் தகுதியானவர் தாய் என்றார்கள். (புகாரி) மேலும், ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து அறப்போரில் கலந்து கொள்ள அனுமதி கேட்டார். நபி (ஸல்) அவர்கள் 'உன் தாயும், தந்தையும் உயிருடன் இருக்கிறார்களா?' என்று கேட்டார்கள். அதற்கு அம்மனிதர், 'ஆம்' என்று


ISBN 978-624-5736-14-0

பதிலளித்தார். நபி (ஸல்) அவர்கள் 'அப்படியென்றால், அவ்விருவருக்கும் பணிவிடைசெய்து உதவி புரிவதற்காக ஜிஹாத் செய் (உழை)' என்று கூறினார்கள். (புகாரி) இதன்வழி தாய்தந்தையரைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு பிள்ளைகளைச் சாரும் என்று நபி (ஸல்) அவர்கள் வலியுறுத்தியுள்ளமை புலனாகின்றது. ''நல்லவற்றி லிருந்து நீங்கள் எதைச் செலவிட்டாலும் பெற்றோருக்காகவும், உறவினருக்காகவும், அனாதைகளுக்காகவும், ஏழைகளுக்காகவும், நாடோடிகளுக்காகவும் (செலவிட வேண்டும்.) நீங்கள் எந்த நன்மையைச் செய்தாலும் அல்லாஹ் அதை அறிந்தவன்'' (அல் குர்ஆன் 2 : 215) என்ற திருக்கூற்றும் அவதானிக்கத்தக்கது.

ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து 'அல்லாஹ்வின் தூதரே என் தாயாருக்கு ஒரு மாத நோன்பு கடமையாகியிருந்த நிலையில் மரணித்து விட்டார். அவர் சார்பாக நான் அதை நிறைவேற்றலாமா? என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் 'ஆம் அல்லாஹ்வின் கடன் நிறைவேற்றுவதற்கு அதிக தகுதி படைத்தது' என்று கூறினார்கள். (புகாரி) இது மரணித்துவிட்ட பெற்றோருக்கான நோன்பைப் பிள்ளைகள் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பை வலியுறுத்துகின்றது.

மேலும், பனூ சாயிதா குலத்தைச் சார்ந்த சஅத் பின் உபாதா (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, 'அல்லாஹ்வின் தூதரே நான் வெளியே சென்றிருந்தபோது என்தாயார் இறந்து விட்டார். நான் அவர் சார்பாக ஏதேனும் தர்மம் செய்தால் அவருக்கு அது பலனளிக்குமா? என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் 'ஆம் (பலனளிக்கும்)' என்று கூறினார்கள். சஅத் பின் உபாதா (ரலி) அவர்கள், எனது மிக்ரா.்.ப் (எனும்) தோட்டத்தை அவர்களுக்காக தர்மம் செய்து விடுகிறேன் என்பதற்குத் தங்களை நான் சாட்சியாக்குகிறேன்,' என்று கூறினார்கள். (புகாரி) இது மரணித்து விட்ட பெற்றோருக்கான பிள்ளையின் தர்மமாகக் கூறப்பட்டுள்ளது. ''யார் வயதான தாய் தந்தையர்களில் இருவரையுமோ, அல்லது இருவரில் ஒருவரையோ பெற்று அவர்களுக்கு (பணிவிடை செய்வதன் மூலம்) சுவனம் புகவில்லையோ அவனுடைய மூக்கு மண்ணாகட்டும்' என்று நபி (ஸல்) அவர்கள் (மூன்று முறை) கூறினார்கள். (முஸ்லிம்) என்பதன் மூலம் பெற்றோருக்குப் பணிவிடை செய்யாதவன் நரகம்தான் புகுவான் என்ற செய்தி வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி ''பெற்றோருக்குத் துன்பம் கொடுப்பது, தற்கொலை செய்து கொள்வது, பொய்ச்சாட்சி சொல்வது பெரும் பாவங்களாகும்.'' (புகாரி) என்றும், ''தன் பெற்றோரைச் சபிப்பவனை அல்லாஹ் சபித்து விட்டான்'' (முஸ்லிம்) என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளாரகள். ''பெற்றோருக்கு நல்லுதவி செய்யுமாறு வலியுறுத்தியுள்ளோம். ஆனால் உனக்கு அறிவு இல்லாத ஒன்றை, எனக்கு இணை கற்பிக்குமாறு அவ்விருவரும் உன்னை வற்புறுத்தினால் அவர்களுக்குக் கட்டுப்படாதே! உங்களின் மீளுதல் என்னிடமே உள்ளது. நீங்கள் செய்து கொண்டிருந்தது பற்றி உங்களுக்கு அறிவிப்பேன். (அல் குர்ஆன் 29 : 8) என்ற திருமறைக்கூற்றின் மூலம் பாவமான காரியங்களில் மட்டும் பெற்றோருக்குக் கட்டுப்படுதல் கூடாது என்பதையும் இஸ்லாம் வலியுறுத்தியுள்ளமையும் நோக்கத்தக்கது.

**முடிவுரை**

இஸ்லாமிய சமூகம் அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு குர்ஆனையும், முஹம்மது நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ் மூலாதாரத்தினையும் அடிப்படையாகக் கொண்டு வாழும் ஒரு சமூகமாகும். அத்தகைய சமூகத்தில் குடும்ப அலகு என்பது முக்கியமானதாகும். அக்குடும்ப உறுப்பினர்களுக்கென்று பல்வேறுபட்ட இல்லறக்கடமைகள் இருக்கின்றன. தனிமனித மற்றும் சமூக நலனின் பொருட்டு குடும்பத்தலைவன் சமத்துவத்தினைப் பின்பற்ற வேண்டும் என்பதும், குடும்பத்தில் கணவனோடு இன்பதுன்பங்களில் இணைந்து நல்லறமாற்றவேண்டிய மனையாட்டியின் கடமைகளும், பிள்ளைகளை வளர்க்கும் பெற்றோருக்குரிய கடமைகளும், தாய்தந்தையரைப் போற்றிப் பேணவேண்டிய பிள்ளையளின் கடமைகளும் அல்குர்ஆன் மற்றும் ஹதீஸ் முதலிய இஸ்லாமிய உயர்ந்த இலக்கியங்களில் நல்லறங்களாக வலியுறுத்தப்பட்டுள்ளன. எனவே இவ் அழகிய முன்மாதிகளின் பிரகாரம் நாம் வாழ்ந்து எம் பொறுப்புக்களை நிறைவேற்றினால் இலகுவில் சுவனத்தை அடையலாம் என்பதே இவ்வாய்வு முன்வைக்கும் போதனையாகும்.

**உசாத்துணை நூல்கள்**

அப்துல் கரீம், கே.எச். (1956). *இஸ்லாம் தந்த இன்பத் திருமணம்.* மதுரை: குர்ஆனியா புக் டிப்போ.

அப்துர்ரஹ்மான், மு. (1998). *இஸ்லாம் தந்த மனிதஉரிமைகள்.* சவுதி அரேபியா: இஸ்லாமிய அலுவல்கள், வக்பு அழைப்பு வழிகாட்டலுக்கான அமைச்சு.

அமீன், ஏ.எச்.ஜீ. (2007). *முஸ்லிம் மரபு வழியுரிமைச் சட்டம்-ஒரு வழிகாட்டி.* கொழும்பு: அல்-அமீன் சட்ட மத்திய நிலையம்.

அப்துல் லதீப், எம்.எம்.ஏ. (2009). *விவாகம்.* அக்கரைப்பற்று: ஜின்னா பப்ளிகேஷன்.

அப்துஸ்ஸலாம், அபூநதீரா உமரி. (2016). *திருக்குர்ஆன் - தமிழாக்கம்.* சென்னை: குர்ட்வேர்ட் புக்ஸ்.

பாவாஸ், இஸட்.ஏ.எம். (2014). *அல்லாஹ்விற்கு அருட்கொடைகளும் அடியார்களின் நன்றியுணர்வும்.* அல்ஹஸனாத் மாத இதழ். கொழும்பு: அல்ஹஸனாத் பதிப்பகம்.

முஹம்மத் அக்ரம், எம்.எம். (2001). *நடைமுறைக்கேற்ற இஸ்லாம்.* கொழும்பு: முஸல்மன் வெளியீட்டகம்.

நிஹால், எம்.தா. (2015). *நீதிக்குச் சான்று பகர்பவர்களாகத் திகழுங்கள்.* அல்ஹஸனாத் மாதஇதழ். கொழும்பு: அல்ஹஸனாத் பதிப்பகம்.

ஜுல்பிகார். (1997). *உங்கள் மனைவியை விவாகரத்துச் சொல்லாதீர்கள்.* தஞ்சாவூர்: ஹாஜியார் புத்தக நிலையம்.